செ.வெ.எண்: 38 – 2020 நாள்: 18.03.2020

**விழுப்புரம் இரயில் நிலையத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளாக பொதுமக்களிடம் பரிசோதனைகள் மற்றும் விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

இன்று (18.03.2020) விழுப்புரம் இரயில்நிலையத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளாக பொதுமக்களிடம் பரிசோதனைகள் மற்றும் விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது இரயில் நிலையத்திற்கு வந்து செல்லும் வெளி மாநில பயணிகளிடம் கொரோனா வைரஸ் குறித்து பரிசோதனை மேற்கொள்ளப்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து பரிசோதனை செய்யக்கூடிய மருத்துவர்களை கைகளில் கை கவசம் அணிந்து பரிசோதனை மேற்கொள்ளவும், பரிசோதனை செய்ய பயன்படுத்தபடும் கருவியினை ஒவ்வொரு முறையும் கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்து பயன்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

இதனை தொடர்ந்து இரயில் நிலைய அறிவிப்பு ஒலி பெருக்கியில் பயணிகளுக்கு கொரோனா வைரஸ் பரிசோதனை முகாம் இரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டிருப்பதை பயணிகளுக்கு தெரியும் வகையில் அனைத்து மொழிகளிலும் அறிவிக்குமாறு இரயில் நிலைய அதிகாரியிடம் அறிவுறுத்தினார்.

இதனை தொடர்ந்து செஞ்சி மற்றும் வளத்தி அரசு பொது மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் சிகிச்சை பிரிவு மற்றும் கொரோனா வைரஸ் பரிசோதனை மையம், மருத்துவமனை வளாக சுகாதாரம், வாகனங்கள் மூலம் கொரோனா வைரஸ் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை.இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து செஞ்சி அரசு பொது மருத்துவமனையில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் துண்டுபிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.அண்ணாதுரை இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்த ஆய்வின்போது செஞ்சி சட்ட மன்ற உறுப்பினா திரு.கே.எஸ்.மஸ்தான் அவர்கள் உடனிருந்தார்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்